[25th March 1961

SRI A. A. RASHEED: May I know whether the Government have paid any amount towards the renovation of V.P. Hall in the Madras City?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Let the hon. Member put a separate question.

SRI N. MARUDACHALAM: *கோவை நகரத்து டவுன் ஹால் பழைய காலத்தில் கட்டப்பட்டதனுல், அதை இடித்துவிட்டு புதியதாகக் கட்டவேண்டுமென்ற கோரிக்கை அந்த நகரசபையிலிருந்து வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதற்கான தொகையை சப்ஸிடியாகவோ, கடனுகவோ கொடுத்து அதைக் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?*

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: *அவ்வாறு கோரிக்கை வந்ததாகத் தகவல் இல்லை. இப்போதுள்ள நிலைமையில் அந்த அந்த நகரசபையின் நிதி நிலைமையை அனுசரித்துத் தான் இவ்விஷயம் கவனிக்கப்படும் என்று கூறினேன்.*

SRI V. K. KOTHANDARAMAN: *டவுன் ஹால் இல்லாத நகரங்களிலே உடனடியாக டவுன் ஹால் கட்டப்படாவிட்டாலும் நகரத்திற்கு சில பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள் வருகிற சந்தர்ப்பங்களில் ஒரு கூட்டமோ, டீ பார்டியோ நடக்கவேண்டியதாக இருந்தால் அந்நகரத்திலுள்ள பாடசாலைக் கட்டிடங்களிலாவது நடத்திக்கொள்வதற்கு அனுமதி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?*

DEPUTY SPEAKER: How does this question arise? I disallow it.

Kurichi Municipality (revenue and expenditure)

*896 Q.—**SRI N. MARUDACHALAM:** *கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

கோவை ஜில்லாவில் குறிச்சி மேஜர் பஞ்சாயத்தாயிருந்ததை 1958-ம் வருஷம் அக்டோபர் மீ 1உ-ல் முனிசிபாலிட்டி என்று விளம்பரம் செய்யப்பட்டபின், மேற்படி தேதியிலிருந்து 1960-ம் வருஷம் நவம்பர் மீ 1-ம தேதி வரையில் அந்த முனிசிபாலிட்டிக்கு வருவாய் எவ்வளவு? செலவு எவ்வளவு?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: The total receipts and expenditure of the defunct Kurichi Municipality for the period from 1st October 1958 to 1st October 1960 are Rs. 2,72,695 and Rs. 2,52,765 respectively.

SRI N. MARUDACHALAM: *கோவை-குறிச்சி பஞ்சாயத்தை முனிஸிபாலிட்டியாகப் பிரகடனம் செய்த பிற்பாடு, ஸ்பெஷல் ஆபீசர் போட்டு நிர்வாகம் நடந்து சில காலத்திற்குள் மறுபடியும் பஞ்சாயத்தாக்கப்பட்டிருக்கிறது. ஸ்பெஷல் ஆபீசர் என்று இருந்த இடைக்காலத்தில் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு*

25th March 1961]

REFERENCE BOOK

பஞ்சப்படி சரியாகக் கொடுக்கப்படவில்லை. எந்தவிதமான நன்மையும் செய்யாமல் இருந்திருக்கிறது. இப்படி ஒரு கஷ்டமான நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி கொடுக்கப்படவில்லை, எந்தவிதமான நன்மையும் செய்யப்படவில்லை என்பது சரியல்ல. முனிஸிபாலிட்டியாக மாற்றவேண்டும் என்றதற்கு அங்குள்ளவர்கள் சம்மதிக்கவில்லை. பழையபடி பஞ்சாயத்தாகவே மாற்றப்பட்டிருக்கிறது.

Erection of statues by municipalities

* 903 *Q*.—SRI S. M. ANNAMALAI: கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகராட்சி மன்றங்களில் சர்க்கார் அனுமதியில்லாமல் சிலைகள் வைக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்களா?

(இ) அப்படியாயின், காரணங்கள் யாவை?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (அ) Yes, Sir.

(இ) Any expenditure incurred on the purchase and erection of statues or busts by local bodies is not an authorized item of expenditure under the Madras District Municipalities Act. Sanction of the Government is necessary for incurring such expenditure. Local Bodies, in some cases, come up to Government for post-approval of the expenditure. It was, therefore, considered desirable to issue general instructions forbidding local authorities from entering into any commitment in respect of purchase and erection of statues without obtaining the prior specific sanction of Government.

SRI S. M. ANNAMALAI: சில சிலைகளை மட்டும் வைக்கலாமென்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்களா? சில சிலைகள் என்றால் எந்த எந்தச் சிலைகளை வைக்கலாம்?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: எந்த விதமான சிலைகளை வைக்கவேண்டுமென்று தனியாக உத்தரவு போடவில்லை.

SRI A. A. RASHEED: May I know whether the Government have sanctioned any amount for the erection of statues recently for any of the municipalities in our State?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Let the hon. Member put a separate question.

SRI A. VEDARATHNAM: நீல் சிலை போன்ற தேசத் துரோகிகளின் சிலைகள் அப்புறப்படுத்தப்படுமா?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: சிலைகளை வைக்கக்கூடிய கேள்வி இது. அப்புறப்படுத்தக்கூடிய கேள்வி அல்ல.